## மாதிரி வினாத்தாள்

## ஒன்பதாம் வகுப்பு – தமிழ் இரண்டாம் தாள்

**காலம்: 2 மணி நேரம்** **மதிப்பெண்: 60**

**அ. பலவுள் தெரிக** (10×1=10)

1. கீழ்க்காணும் தொடர்களில் பெயர்ப்பயனிலையைக் குறிப்பது
   i)உமா வந்தாள் ii) வந்தாள் உமா iii) அவர் ஆசிரியர் iv) அவர் யார்?
2. கீழ்க்காணும் தொடர்களில் காரணவினையைக் குறிப்பது
   i)மணி, மாலாவுக்குத் தண்ணீர் கொடுத்தான்.
   ii)மணி, மாலாவுக்குத் தண்ணீர் கொடுக்கச் செய்தான்.
   iii)மணி, மாலாவிடம் தண்ணீர் வாங்கினான்.
   iv)மணி, மாலாவுக்காகத் தண்ணீர் வாங்கினான்.
3. மூடுபனி, பாடும் பறவை – இவற்றின் இலக்கணக் குறிப்பு
   i)வினைத்தொகை, வினையெச்சம்
   ii)வினையெச்சம், பெயரெச்சம்
   iii)பெயரெச்சம், வினைத்தொகை
   iv)வினைத்தொகை, பெயரெச்சம்
4. அமீர் கீழே விழப் பார்த்தான் – இத்தொடரின் பொருள்
   i)அமீர் கீழே விழுந்தான்
   ii)அமீர் கீழே விழவில்லை
   iii)அமீர் கீழே பார்த்தான்
   iv)அமீர் கீழே பார்க்கவில்லை.
5. பீட்டர் கதை படித்தான் – இத்தொடரில் மறைந்துள்ள வேற்றுமை உருபு
   i)ஐ ii) கு iii) ஆல் iv) இன்
6. பாவை + கூற்று; பாவை + கூத்து – இப்புணர்ச்சிகளில்
   i)முதல் தொடரில் வல்லினம் மிகும்; இரண்டாம் தொடரில் மிகாது.
   ii)இரு தொடர்களிலும் வல்லினம் மிகா.
   iii)முதல் தொடரில் வல்லினம் மிகாது; இரண்டாம் தொடரில் மிகும்.
   iv)இருதொடர்களிலும் வல்லினம் மிகும்.
7, அடைப்புக் குறிக்குள் உள்ள வினையடியைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றுக.
   உலகில் மூவாயிரம் மொழிகள் --------- (பேசு)
8. பிழை நீக்கி எழுதுக.
   சாலமனும், வேலனும் நாளை நடைபெறும் அரங்கத்தில் கவிதை படித்தனர்.
9. பொருந்தாத சொல்லைக் கண்டறிக.
   i)அமெரிக்கா ii) கனடா iii) இலங்கை iv) தமிழ்நாடு
10. பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.
   நான்கு ஆதார ருசிகளின் கலப்பு.

**ஆ. ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (10×1=10)

11. 'படி' என்னும் வினையடியைப் பிறவினையாகவும் காரணவினையாகவும் மாற்றுக.
12. கலையரசி ஈருருளியை ஓட்டினாள் – இத்தொடரில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவற்றை எடுத்து எழுதுக.
13. 'பொன்னா பைக்குள் கையை விடு'
   'பொன்னா பட்டத்தைப் பறக்கவிடு'

இத்தொடர்களில் 'விடு' என்னும் வினைச் சொல் முதல்வினையாகவும், துணைவினையாகவும் பயன்படும் இடங்களை அடிக்கோடிடுக.

14. பொய்ச்சொல், பொய் சொல் – பொருள் வேறுபாட்டை எழுதுக.

15. தானியக்கப் பண இயந்திரம் – திறனட்டை

இச்சொற்களை இணைத்து ஒரு தொடராக்குக.

16. பிறப்புச் சான்றிதழ், வருமானவரிச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் போன்றவை அரசால் மக்களுக்கு இணையம் மூலம் வழங்கப்படுகின்றன – செய்வினைத் தொடராக்குக.

17. வல்லினம் மிகும் இடம் அறிந்து இடுக.

திருநிறைசெல்வன்

திட்டகுழு

18. 'கண்ணும் கருத்துமாக வளர்த்த பெற்றோரை மேலும் கீழுமாகப் பார்த்தான்'

இத்தொடரில் அமைந்துள்ள மரபு இணைச் சொற்களை எடுத்தெழுதுக.

19.




மேற்கண்ட படத்தில் மேலும் கீழும் உள்ள வட்டங்களை முதல்வினைகொண்டு நிரப்புக.

20. 'நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்குப் பாய்வதுபோல' – இப்பழமொழியைத் தொடரில் அமைத்து எழுதுக.

**இ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.** (மூன்றனுக்கு மட்டும்) (3×2=6)

21. துணைவினையை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

22. வல்லின எழுத்துகளின் புணர்ச்சி இலக்கணம் ஏன் தேவைப்படுகிறது?

23. ஆறு + காலம்; ஏழு + கதிர்; எட்டு + தொகை; ஒன்பது + சுவை; பத்து + பாட்டு – இவற்றை இணைத்து எழுதி வல்லினம் மிகும் இடங்களைக் குறித்துக்காட்டுக.

24. அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்

அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவேனே

இவ்வடிகளில் அமைந்துள்ள மோனைச் சொற்களை எடுத்து எழுதி எழுத்தை அடிக்கோடிடுக.

25. நாளைக்கு மார்னிங் ஸ்கூலுக்கு வரும்போது டிபன்பாக்ஸ் எடுத்துவாருங்கள் – ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

**ஈ. தமிழ் எண்களில் எழுதுக.** (2×1=2)

26. 35 + 40 = ___

27. நீங்கள் பிறந்த ஆண்டு = ______

**உ. தமிழில் மொழிபெயர்க்க.** (2 × 1=2)

28. *Every flower is a soul blossoming in nature.*

29. *You have to dream before your dreams can come true.*

**ஊ. மொழியை ஆள்க.** (5 ×4 = 20)

30. கீழுள்ள பத்தியில் உள்ள தொடர்களை உரையாடலாக மாற்றுக.

எது அறிவைத் துலக்கும் உணவு? சமச்சீராய் உள்ள எல்லாமே நல்உணவுதான். வளரும் குழந்தைக்குத் தேவையான அளவு மாவுச்சத்தும், புரதமும், நல்ல சிறுகனிமங்கள் நிறைந்த காய்கறிகளும், கனிகளும் போதும். முட்டையும் மீனும் குழந்தைகளுக்குச் சிறப்பான உணவு.

31. நான் அன்புடன் நடந்துகொள்வேன்.

இத்தொடரை ஒவ்வொரு புதிய சொல்லாகச் சேர்த்து நான்கு தொடர்களை உருவாக்குக.

32. புதிர்களுக்கு விடையளி.




இடமிருந்து வலம்:

1. நோய் வந்தால் செய்வது ______________(6 எழுத்துகள்)
4 கொடுத்தாலும் குறையாதது …………….. (3 எழுத்துகள்)

மேலிருந்து கீழ்

1. இரட்டைக் காப்பியங்களுள் ஒன்று ________(5 எழுத்துகள்)
2. கரிகாலன் கட்டியது _____________(4 எழுத்துகள்
3. கன்றுக்குட்டி ________ விளையாடும்.(3 எழுத்துகள்)

33. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



34. உங்கள் பள்ளிக்கு வருகை தரும் தமிழ்ப் பேராசிரியர் செவ்வேளை வரவேற்று ஒரு மடல் வரைக.

அல்லது

நீங்கள் குடியிருக்கும் பகுதியில் மழையினால் பழுதடைந்த சாலையைச் செப்பனிட்டுத் தருமாறு நகராட்சி ஆணையருக்கு ஒரு கடிதம் எழுதுக.

**எ . கட்டுரை வடிவில் விடையளிக்க.** (2×5=10)

35. தண்ணீர் சிறுகதையைச் சுருக்கி எழுதுக.

அல்லது

நீங்கள் பயன்படுத்தும் இரண்டு மின்னணு இயந்திரங்கள் பற்றி விவரி.

*36* ஏறுதழுவுதல் தமிழர் பண்பாடே என்பதை நிறுவுக.

அல்லது

இயற்கைப் பாதுகாப்பில் மாணவர் பங்கு என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.